பக்கங்கள் 16+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 14 திங்கட்கிழமை 30.09.2024 | அதிர்வு 60

## பஸ் உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

**யாழ்ப்பாணத்தில் பயங்கரம்**

யாழ்ப்பாணம், மணியந்தோட்டம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த முகமூடி அணிந்த நான்கு பேர் கொண்ட கும்பல், பஸ் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இணைய விரும்பாவிட்டால்

# தமிழரசாகத் தனித்து களமிறங்குவோம்!

### மன்னாரில் முன்னாள் எம்.பி. சுமந்திரன் தெரிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

“வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் தமிழரசுக் கட்சியின் பெயரில் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்து வெளியேறிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அந்த அழைப்பை அந்தக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமிழரசுக் கட்சியாகத் தனித்துத் தேர்தலை எதிர்கொள்வோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் மன்னாரில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04




## அரசியல்வாதிகளின் உறவினர்கள் பலர் வெளிநாட்டுத் தூதரகப் பதவி நிலைகளில்

இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் அல்லாத அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் அரசியல்வாதிகளின் உறவினர்கள் பலர் வெளிநாட்டுத் தூதரகங்களில் பல்வேறு பதவி நிலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கா வொஷிங்டனில் இலங்கைக்கான தூதுவராக முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க செயற்படுவதோடு தூதரகத்தின் மூன்றாவது அதிகாரி தாரக திஸாநாயக்க ஆவார்.

தாரக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவின் மகனாவார்.

அங்கு எழுத்தாளராகக் கடமையாற்றுபவர் முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தின் மகள் இந்திவரி குலரத்ன.

இதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட தூதரகத்தில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவின் மகன் விபுல கடமையாற்றியுள்ளார்.

அதே தூதரகத்தின் ஊடக அதிகாரி அசோக ஜயதுங்க முன்னாள் 04



# முன்னாள் எம்.பி. செலுத்திய கார் தலைகீழாகக் கவிழ்ந்தது!

(எம். எப். றிபாஸ்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மொனராகலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்கவின் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று மொனராகலை பிபில வீதியின் நக்கலவத்தை பகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசிறி ரத்நாயக்க காரைச் செலுத்திச் சென்றுள்ள நிலையில் வாகனத்துக்குள் குளவி ஒன்று புகுந்துள்ளது.

அந்தக் குளவியை கையால் விரட்ட முற்பட்டபோது காரைக் கட்டுப்படுத்த



முடியாமல் போயுள்ள நிலையில் வீதியை விட்டு விலகிய கார் வீதியோரத்தில் இருந்த மண் குவியலில் மோதி தலைகீழாகக் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் காயம் ஏற்படவில்லை. ஆயினும், அவரது வாகனம் சேதமடைந்துள்ளது.

# விருது வழங்கும் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் ஏற்பாட்டில் சித்த ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு சுன்னாகத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இணுவில் மக்லியோட் வைத்திய சாலையின் பணிப்பாளரும் யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் மற்றும் சிறுவர் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணருமான பா.சயந்தனின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் விருந்தினர்களாக மயக்க மருந்து உணர்வழியியல் வைத்திய நிபுணர் நா.தரணிதரன், உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவர்களுக்கு அவர்கள் ஆற்றிவரும் சேவையைக் கௌரவித்து விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

விசேடமாக ஊடகத்துறையில் ஆற்றிவரும் அர்ப்பணிப்பு மிக்க சேவை




யைக் கௌரவித்து ஊடகவியலாளர் விக்கினேஸ்வரன் கஜீபனுக்கு "ஊடக மணி மகுடம்" என்ற விருதும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

இந்த விருது குழந்தை மற்றும் சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர் பா.சயந்தனால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# எழுத்தூர் சந்தியில் திறக்கப்பட்ட மதுபான சாலை; உடனடியாக இடமாற்றக் கோரி மக்கள் போராட்டம்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், தலை மன்னார் பிரதான வீதி, எழுத்தூர் சந்திக்கு அருகாமையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபான சாலையை உடனடியாக இடமாற்றக் கோரி இன்று திங்கட்கிழமை (30) காலை 9 மணி முதல் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் என மக்கள் ஒன்று கூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் புதிதாக திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த மதுபானசாலை அமைந்துள்ள பகுதியில் மக்களின் குடியேற்றம், இளைஞர் பயிற்சி நிலையம், காமன்ஸ், பள்ளிவாசல் ஆகியவை காணப்படுகின்றன. இந்த நிலையில் மக்களின் எதிர்ப்பையும் மீறி இங்கு மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த மாதம் இந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு, குறித்த மதுபான சாலையை திறக்க அனுமதிக்க வேண்டாம் என கோரி மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். தாங்கள் தொடர்ந்து பல்வேறு எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்த நிலையிலும் குறித்த மது விற்பனை நிலையம் கடந்த வாரம் திறக்கப்பட்டது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பிரேத பெட்டியுடன் குறித்த பகுதிக்கு வந்த நூற்றுக் கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதா கைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்று திங்கட்கிழமை (30) இந்த மது விற்பனை நிலையம் திறக்கப் படவில்லை.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் மக்களுடன் கலந்துரையாடினார். எனினும் மன்னார் மாவட்ட அரச அதிபர் குறித்த பகுதிக்கு வர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன் போது மக்கள் தமது பிரச்சினைகளை அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இந்த நிலையில் மதுபானசாலையை பிரதேச செயலாளர் அல்லது அரச அதிபர் உடனடியாக மூட முடியாது என்றும் மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் ஊடாக வே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் உடனடியாக மதுவரி திணைக்கள ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வருவார் என்றும் குறிப்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து இந்த மதுபானசாலையை நிரந்தரமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பார் என்றும் குறிப்பாக தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பு காணப்படுகின்ற நிலையில் குறித்த மதுபானசாலை திறக்கப்பட்டுள்ள விடயத்தை உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வருவார் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.







# மட்டக்களப்பில் போட்டியிடுவதற்கு 3 சுயேச்சைக்குழுக்கள் கட்டுப்பணம்





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 3 சுயேச்சைக் குழுக்கள் இன்று திங்கட்கிழமை மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணங்களைச் செலுத்தியுள்ளன.

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணங்களைச் செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணவதிப்பிள்ளை மோகன் தலைமையில் சுயேச்சைக் குழுவில் 8 பேர் போட்டியிடுவதற்காக முதன் முதலாகக் கட்டுப்பணத்தை இன்று மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் திணைக் களத்தில் செலுத்தியுள்ளார்.

அதேவேளை, மட்டக்களப்பு, நல்லையா வீதியைச் சேர்ந்த அரச திணைக் களத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற 81 வயதுடைய கனகசூரியம் சோமாஸ்கந்த மூர்த்தி தலைமையில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடுவதற்கு 8 பேருக் கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் அலிஹார் மௌலானாவின் ஊடக செயலாளர் அஸ்மி தலைமையில் சுயேச்சைக் குழுவில் 8 பேர் களமிறக் கப்பட்டு அதற்கான கட்டுப்பணம் இன்று செலுத்தப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பஸ் உரிமையாளர் மீது...

உரிமையாளரை வாள்களால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டுத் தாக்குதலில் படுகாய மடைந்த நபர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மணியந்தோட்டம் பிரதேசத்தில் வசிக்கும் பஸ் உரிமையாளரே படுகாய மடைந்துள்ளளார்.

வாள்வெட்டுத் தாக்குதலில் பஸ் உரிமையாளரின் கைகளில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அப்போது பஸ்ஸில் இருந்த சில பெண்கள் பஸ்ஸை விட்டு இறங்கி கடைக்குத் தேடினர்.

சி.சி.ரி.வி. காட்சிகள் ஊடாக சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அரசியல்வாதிகளின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செய்தித் தொடர்பாளராகக் கடமையாற்றியவர்.

அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல்ஸ் கொன்சல் ஜெனரலாக கடமையாற்றுபவர் வைத்தியர் லலித் சந்திரதாஸ.

இவர் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் மைத்துனர் ஆவார்.

ஆஸ்திரேலியாவின் கான்பராவின் உயர்ஸ்தானிகரான சித்ராங்கணி வாகீஸ்வர ஜனாதிபதி அலுவலகத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றவராவார்.

அந்த அலுவலகத்தில் மூன்றாவது அதிகாரியாகப் பணிபுரிபவர் டி.சி.பெர்னாண்டோபுள்ளே முன்னாள் அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மனைவியாவார். மெல்பேர்ன் கொன்சல் ஜெனரல் சந்தித் சமரசிங்க. இவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்.

ஜப்பான் டோக்கியோவில் இலங்கைக் கான தூதுவர் ரொட்னி பெரேரா. இவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு நெருக்கமான ரொனால்ட் பெரேராவின் சகோதரர் ஆவார். 2006ஆம் ஆண்டு முதல் இதே அலுவலகத்தில் எழுத்தளராகக் கடமையாற்றி வரும் இந்து குணரத்ன, முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் உறவுக்கார மகள் ஆவார்.

இலண்டனில் உள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகர் ரோஹித போகல்லாகம முன்னாள் அரசியல்வாதி ஆவார். இங்கு மூன்றாவது அதிகாரியான சேனிய புஞ்சி நிலமே முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயின் மகன்.

இதற்கு முன்னர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பியல் சாந்தவின் மகன் கசுந்த சில்வா மூன்றாவது அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவின் மகனான சஹஸ்ர பண்டார, பாரிஸில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் மூன்றாவது அதிகாரியாவார்.

அதற்கு முன்னர் அந்தப் பதவியில் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவின் இளைய சகோதரரான அமில திஸாநாயக்க பணியாற்றியிருந்தார்.

அத்தோடு சீஷெல்ஸ் விக்டோரியாவின் உயர்ஸ்தானிகராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஸ்ரீமால் விக்கிரமசிங்க ஆவார். இவர் ஷிரந்தி ராஜபக்ஷவின் சகோதரர் ஆவார். பாலஸ்தீனத்தில் இலங்கைக்கான பிரதிநிதியாக முன்னாள் பிரதி அமைச்சர் நாவலகே பென்னட் குரே பதவி வகிக்கின்றார்.

மேற்குறிப்பிட்ட இந்தப் பட்டியலிலுள்ள நபர்கள் அல்லாத இன்னும் பலர் இவ்வாறு வெளிநாட்டுத் தூதரகங்களில் பல்வேறு பதவி நிலைகளில் பணிபுரிகின்றமை அண்மையில் வெளிவந்துள்ளன.

### தமிழரசாகத் தனித்து...

"நாங்கள் அண்மையில் எமது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகள் அனைத்தையும் கட்சிக்கு மீள வருமாறு அழைத்து தீர்மானம் நிறைவேற்றியிருந்தோம். தமிழரசுக் கட்சியின் பெயரிலும் தமிழரசுக் கட்சியின் சின்னத்திலும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அந்தக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து தீர்மானம் நிறைவேற்றியிருந்தோம்.

அப்படி அவர்கள் வராவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் தனித்துப் போட்டியிடுவதாகவும் தீர்மானம் எடுத்திருந்தோம்.

ஆகவே, நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு இன்னும் சிறிது காலமே இருப்பதால் அவர்களும் தங்கள் முடிவுகளைத் துரிதமாகத் தெரியப்படுத்துவதனால் வெகுவிரைவில் அன்று நாங்கள் நியமித்த நியமனக் குழு கூடி அவர்கள் இணங்கி வரவில்லை என்றால் அவற்றைக் கருத்தில் எடுத்து தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை நாங்கள் தீர்மானிப்போம்.

மேலும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இளைஞர்கள், யுவதிகள், ஆற்றல் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதுடன் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்து மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற தீர்மானத்தையும் இறுதியாக நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளோம்." – என்றார்.

# சாதாரண தர பரீட்சையில் கிழக்கு இரண்டாமிடம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வெளியான க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் கிழக்கு மாகாணம் 2 ஆம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

கடந்த வருடம் 73.75 புள்ளிகளுடன் ஆறாம் இடத்தில் இருந்த கிழக்கு மாகாணம், இந்த முறை 77.36 புள்ளி பெற்று அதிரடி பாய்ச்சலில் இரண்டாம் நிலைக்கு முன்னேறியுள்ளது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தலைமையிலான கல்விசார் குழாத்தினர் நுணுக்கமான அணுகுமுறை மிகச்சிறந்த வழிகாட்டல் மற்றும் உரிய காலத்தில் பகுப்பாய்வு செய்தல் போன்றவைகளினால் இந்தச் சாதனை எட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.







# தலசீமியா நோய்க்கான சிகிச்சையை கிழக்கில் விஸ்தரிக்கும் நடவடிக்கை!

## பிராந்திய தலசீமியா மையம் ஆரையம்பதியில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஷதலசீமியா, ஒரு நபருக்கு அவரது பெற்றோரிடமிருந்து கடத்தப்படும் மரபணு நோய் ஆகும். ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தி குருதிச்சோகை உண்டாக்குதலே இந்த நோய்க்கான அறிகுறியாகும்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் 200 மேற்பட்டவர்களுக்கு காணப்படும் இந்த நோயானது, நாடளாவிய ரீதியில் 2000 இற்கும் அதிகமான குழந்தைகளைப் பாதித்துள்ளமை கண்டறிப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், நோயாளர்களை அடையாளம் காணல், நோயாளர்களுக்கான இரத்த மாற்றுச் சிகிச்சை, நோய்த் தடுப்பு ஆலோசனைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் உட்பட்ட பல்வேறு வகையான நோய்த் தடுப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான விசேட ஒருங்கிணைப்பின் தேவைகருதி அமைக்கப்பட்ட இந்த நிலையத்துக்கான நிதிப்பங்களிப்பை அயர்லாந்தைச் சேர்ந்த சோனியா லிஞ்ச் என்கிற குழந்தையின் நினைவாக, பெற்றோர்கள் நண்பர்கள் மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர்.



ஆரையம்பதி பிரதேச வைத்திய சாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.குணராஜசேகரம் தலைமையில் இடம்பெற்ற சம்பிரதாய பூர்வ நிலையத்திறப்பு விழாவில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர். முரளீஸ்வரன், மட்டக்களப்பு போதனா வைத்திசாலைப் பிரதிப் பணிப்பாளர், டாக்டர் பீ. மைதிலி உட்பட போதனா வைத்திசாலையின் குழந்தை வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், மற்றும் பிராந்திய வைத்திய அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வைத் தொற்றாநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் இ. உதயகுமார் ஒருங்கிணைத்து நடத்தியிருந்தார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பொதுத் தேர்தலுக்கு உரிய நிதி ஒதுக்கீடு

2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படும் 11 பில்லியன் ரூபாவை விடுவிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கையொப்பமிட்டுள்ளார் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான ஆரம்ப விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

அதன் பின்னரே இத்தகவலை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதி மாவட்ட செயலாளர்களின் பங்குபற்றலுடன் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றமையுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க அவர்களும் கலந்துகொண்டார்.

இதேவேளை, மாவட்ட தேர்தல் அதிகாரிகள், உதவி ஆணையாளர்கள், பிரதி தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் இடையிலான மற்றுமொரு சந்திப்பும் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளர்களே பெரும்பாலும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தேர்தலுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பது தெரிந்ததே.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செப்டம்பர் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான வர்த்தமானியில் கையெழுத்திட்டார்.

பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஒக்டோபர் நான்காம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்கப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அதன் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னரே - முற்கூட்டியே - கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது.

தற்போது கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை இருந்தது.

அதனால் அடுத்த பொதுத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை அந்த நாடாளுமன்றம் முற்கூட்டியே செய்யவில்லை. அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் அதைச் செய்ய அப்போது எதிர்பார்த்திருக்கக் கூடும்.

ஆயினும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் பொதுத் தேர்தலுக்கான நிதியை தேவைப்படும் சமயத்தில் ஒதுக்கீடு செய்வதற்கான அதிகாரம் அரசமைப்பின் 150 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு விசேடமாக வழங்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரத்தின் கீழ்தான் வரும் நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான நிதியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

புதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதால் தேர்தல் ஆணையம் பொதுத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை இனி தங்கு தடை இன்றி முன்னெடுக்கும் என எதிர்பார்க்க முடியும்.



# சிறுவர்களுக்கான வலய விளையாட்டில் சாய்ந்தமருது லீடருக்கு 2 முதலிடங்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்றப் வித்தியாலயம் வலய மட்டத்தில் 2 முதலாமிடங்களைப் பெற்று கிழக்கு மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான போட்டிகளில் பாடசாலையின் தரம் 3, தரம் 4, தரம் 5 ஐச் சேர்ந்த ஆண், பெண் 6 அணிகள் கலந்து கொண்டன.

அதில் 2 அணிகள் முதலாமிடங்களையும் 4அணிகள் இரண்டாமிடங்களையும் பெற்றுக் கொண்டன.

இந்த மாணவர்களை இந்தப் போட்டிகளுக்காகப் பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ.ஆபாக் மற்றும் மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியை மாஜிதா, ஆசிரியை றிபானா ஆகியோர்களுக்கும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் உளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.









# உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு

(எஸ். எம் சுரேந்திரன்)

கொழும்பு, புறக்கோட்டை அரிமா சங்கம், முகத்துவாரம் தெற்கு அரிமா சங்கத்துடன் இணைந்து நடத்திய உடல் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்வு, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது இலவச கண் பரிசோதனையும், மற்றும் நீரிழிவு பரிசோதனை என்பன இடம்பெற்றன.

டாக்டர் அருள் இராமலிங்கம், டாக்டர் சி. பெ. நிர்மலா ஆகியோருடன் புறக்கோட்டை லயன்ஸ் கழக தலைவர் நாராயணசாமி சங்கர், முகத்துவாரம் தெற்கு லயன்ஸ் கழக தலைவர் திருத்தணி ஈசன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியில் 28 பேர் 9 பாடங்களில் விசேட சித்தி!

(கே.வசந்தன்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வரலாற்றில் முதல் தடவையாக 28 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் ஆ. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் கடந்த காலங்களிலும் அதிகளவான பெறுபேறுகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னிலை வகித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது வெளிவந்துள்ள சாதாரண சாதாரண தர பரீட்சை பெறுபேற்றிலும் 28 மாணவர்கள் விசேட சித்திகளையும், 19 மாணவர்கள் எட்டுப் பாடங்களில் விசேட சித்தியையும் ஒரு பாடத்தில் திறமை சித்தியையும் பெற்று சித்தி அடைந்துள்ளனர்.

அதிக மாணவர்கள் இந்த முறை அனைத்து பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வன்முறையற்ற உரையாடல் தலைமைத்துவ பயிற்சிகள்

அறிவு ஒளி மைய முத்தமிழ் மாணவர் மன்ற மாணவர்களுக்கு வன்முறையற்ற உரையாடல் என்னும் தொனிப் பொருளில் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை திருகோணமலை பெருந்தெரு விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் உள்ள கலைமகள் அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை அறிவு ஒளி மைய நிறுவுனர் உணபதிசிவம் உதயகுமார் அஜித்குமார், பட்டினத் தெரு அறநெறிப் பாடசாலை ஆசிரியல் திருமதி இளங்கோவன் ஜெயவதனி ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர்.

அறிவு ஒளி மையத்தின் நிர்வாகச் செயலாளர் செல்வி ஜீவரத்தினம் புகழ்வேந்தன் டிலக்ஷிகாவின் நிதிப் பங்களிப்பில் இது நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




# கோரக்கர் வித்தியில் கௌரவிப்பு!

சம்மாந்துறை வலயத்தில் கடந்த 36 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜாவைக் கௌரவிக்கும் நிகழ்வு கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் எஸ்.இளங்கோபன் தலைமையில் நடைபெற்றது. அவரது சேவையை பாராட்டி அதிபர், ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித் தனர். பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.மோகன் கலந்து கொண்டு வாழ்த்தி உரையாற்றினார்.

நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான சந்தேகநபர் தொடர்பில் விசாரணை!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்று கல்முனை விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை (27) மாலை இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய சந்தேக நபர்களைச் சான்றுப் பொருள்களுடன் கைது செய்தனர். அவர்களை இறக்காமம் பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்தனர்.

இவ்வாறு கைதானவர் வரப்பத்தான் சேனை 02 வண்டிக்காரன் வீதி பகுதியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையாவார்.



5 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் போதைப் பொருள் நுகர்தல் மற்றும் விற்பனையில் பல நாட்களாக ஈடுபட்டவர் என்று விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமாரஈ அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.






# கார்மேல் பாத்திமா கல்லூரியின் ஜுபிலி ஆண்டாகப் பிரகடனம்

(பாறுக் ஷிஹான்)

கார்மேல் பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு ஜுபிலி ஆண்டாக பிரகடனம்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு கல்வி சேவையை 2025 ஆம் ஆண்டு நிறைவு செய்யவுள்ள நிலையில் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி வரையான ஆண்டை ஜுபிலி ஆண்டாக பிரகடனப்படுத்தி பல செயற்றிட்டங்களை செய்யவுள்ளதாக பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் தெரிவித்திருந்தார்.

பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று (29) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த விடயத்தை அவர் தெளிவுப்படுத்தினார்.

இவ்வாண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக 45 அங்கத்தவர்களை கொண்ட ஜுபிலி குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பாடசாலை சங்க அபிவிருத்தி நிறைவேற்றிக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க நிறைவேற்றிக் குழு உறுப்பினர்கள் இணைந்து குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, பிரித்தானியாவில் உள்ள பழைய மாணவர்கள் சங்கத் தலைவர்கள் உட்பட இந்தக் குழுவில் தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என இயங்கவுள்ளது. மேலும் செயற்றிட்டங்களுக்காக ஆறு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.





# புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைதாகி விசாரணை

( பாறுக் ஷிஹான்)

வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைதான ஐந்து சந்தேக நபர்களையும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல். நதீர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (27) இரவு அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதி பகுதியில் வீடொன்றில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

சிலர் வீடொன்றில் புதையல் தோண்டுகின்றனர் என்று பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைதான ஐந்து சந்தேக நபர்களையும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல். நதீர் முன்னிலையில் ஆஜர்படுத்திய வேளை சந்தேக நபர்களை இன்று திங்கட்கிழமை (30) வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

சம்பவத்தில் பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதியில் வசிக்கும் நபர் உட்பட அவரது நண்பர்கள் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் 28 தொடக்கம் 30 வயது மதிக்கத்தக்கவர்கள. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் நால்வர் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.





# சாரணர் வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் சிரமதானம்

(எம். எப். றிபாஸ்)

சாரணர் வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சார்ணர் சங்கத்தால் மாபெரும் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் மாவட்ட ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெவ்வையின் வழிகாட்டலின் கீழ் சாரண ஆசிரியர் றிப்கி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சிரமதான நிகழ்வில் உதவி மாவட்ட ஆணையாளர்கள், அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், சாரணர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# புலமைசார் செயலமர்வும் ஆய்வுக் கட்டுரை வெளியீடும்

(எம்.வை.அமீர்)

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட உத்தேச மறுசீரமைப்புத் தொடர்பான புலமைசார் செயலமர்வும், சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பின் வெளியீட்டு விழாவும் தென் கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் ஏற்பாட்டில் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்செய்க் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் நேற்று பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் கலந்து கொண்டார்.

வெளியிடப்பட்ட புத்தகம் தொடர்பான விமர்சன உரையை கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன் நிகழ்த்தினார்.

நிகழ்வின் கௌரவ அதிதியாக கஹடோவிட்ட அல் ஹிமா இஸ்லாமிக் நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்செய்க் எம்.ஏ.ஏ. நூறுல்லாஹ் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக் கழக கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலில், பேராசிரியர் எஸ்.எம். ஐயூப் மற்றும் பல்கலைக்கழக திணைக்களங்களின் தலைவர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபார், மார்க்க பெரியார்கள், சட்டத்தரணிகள், காதி நீதிவான்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


Gsm GUNAAM'S SUPERMARKET
குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# ஹிஸ்புல்லா தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா: இஸ்ரேலின் இலக்கில் பலி ?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை இலக்காக வைத்து இஸ்ரேலிய தாக்குதல்கள் தெற்கு பெய்ரூட் புறநகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை(27) பாரிய வான் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆயினும் பெய்ரூட் கள ஊடக அறிக்கைகளின் படி நஸ்ரல்லா (Hassan Nasrallah) இன்னமும் உயிருடன் இருப்பதாக ஹிஸ்புல்லாவுடன் தொடர்புடைய ஒரு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் ஈரானின் மூத்த பாதுகாப்பு அதிகாரி தெஹ்ரான் அவரது நிலையை சரிபார்த்து வருவதாகவும் கூறினார்.

இஸ்ரேலிய இராணுவம் பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் இறப்புகள் ஏற்பட்டன. மற்றும் பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதியான ஹரேக் ஹ்ரீக்கில் வெள்ளிக்கிழமை ஆறு கட்டடங்களை முழுமையாக அழித்தன. இது இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையே கிட்டத்தட்ட ஒரு வருட மோதலின் போது லெபனான் தலைநகரில் நடந்த மிக முக்கியமான கடுமையான தாக்குதலாகும்.

**யார் - ஹசன் நஸ்ரல்லா ?**

ஷேக் ஹசன் நஸ்ரல்லா மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஹிஸ்புல்லாவிற்கு தலைமை தாங்கி, மத்திய கிழக்கின் மிகவும் சக்திவாய்ந்த போராளிக் குழுவை வழிநடத்தும் தலைவராவார்.

1960 இல் போராடும் ஷியா குடும்பத்தில் பிறந்த அவர், இறையியல் படிப்பைத் தொடர்ந்தார். ஹிஸ்புல்லாவின் நிறுவனர்களில் ஒருவராக வெளிப்படுவதற்கு முன்பு, ஷியா அரசியல் மற்றும் துணை ராணுவ அமைப்பான அமல் இயக்கத்தில் தொடர்ந்து ஈடுபட்டார்.

1985 ஆம் ஆண்டில், ஹிஸ்புல்லா அமெரிக்காவையும் – சோவியத் யூனியனையும் இஸ்லாத்தின்



முக்கிய எதிரிகள் என்று பெயரிட்ட ஒரு "திறந்த கடிதத்தை" வெளியிட்டதன் மூலம் அதன் உருவாக்கத்தை முறையாக அறிவித்தார்.

முஸ்லீம் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதாக குற்றம் சாட்டிய இஸ்ரேலை "அழிக்கப்பட வேண்டும்" என்றும் அந்த கடிதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டதும் முக்கியமானதாகும்.

நஸ்ரல்லா பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1997 இல் ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்தது.

**இஸ்ரேலின் பரம எதிரி**

ஹசன் நஸ்ரல்லா சுமார் மூன்று தசாப்தங்களாக ஹிஸ்புல்லாவின் தலைமை பொறுப்பு வகித்து வருகிறார். 64 வயதான அவரது தலைமையின் கீழ், ஹிஸ்புல்லா இஸ்ரேலுக்கு எதிராக நீண்ட காலமாக போரிட்டு வருகிறது.

அயல் நாடான சிரியாவில் நடந்த மோதலிலும் பங்கேற்றார். சிரிய ஜனாதிபதி பஷர் அசாத்துக்கு ஆதரவாக, அவரின் அதிகார சமநிலையை உயர்த்த வலுவாக உதவினார்.

1982 கோடையில் லெபனானுக்கு படையெடுத்த இஸ்ரேலியப் படைகளை எதிர்த்துப் போராட வந்த ஈரானிய புரட்சிக் காவலர்களுடன், ஹிஸ்புல்லா துணையாக நிறுவப்பட்டது. இதன் பின்னரே நஸ்ரல்லா – ஹிஸ்புல்லா இஸ்ரேலின் பரம எதிரியாக மாறியது.

தொடர்ச்சி▼




# ஹிஸ்புல்லா தலைவர் ஷேக் ஹசன் நஸ்ரல்லா: இஸ்ரேலின் இலக்கில் பலி ?

தொடர்ச்சி▲

2000 ஆம் ஆண்டில் தெற்கு லெபனானில் இருந்து இஸ்ரேலிய துருப்புக்கள் திரும்பப் பெறப்பட்டு, 18 ஆண்டுகால ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவந்த போரில் நஸ்ரல்லாவின் தலைமையின் கீழ், ஹிஸ்புல்லா முக்கிய பங்கு வகித்தது.

இதன் பின்னர் 2006 இல், ஹிஸ்புல்லா இஸ்ரேலுடன் 34 நாள் மோதலில் ஈடுபட்டது. அது ஒரு போர் நிறுத்தமாக முடிந்தது. அதை அவர் "தெய்வீக வெற்றி" என்று அறிவித்தார்.

**நஸ்ரல்லாவின் பாலஸ்தீன ஆதரவு**

ஒக்ரோபர் 7 அன்று இஸ்ரேல்-ஹமாஸ் போர் வெடித்த பிறகு, ஹிஸ்புல்லா எல்லையில் உள்ள இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களை தொடர்ந்து நடத்தியது.

காசா மோதல் தீவிரமான காலத்தில் ஹிஸ்புல்லா குழுவினர் எல்லை தாண்டிய தாக்குதல்களால் இஸ்ரேலியப் படைகளைத் திசைதிருப்பின. இல்லையெனில் காசாவில் ஹமாஸ் மீது கவனம் செலுத்தப்பட்டு இருக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பாலஸ்தீன பிராந்தியத்தில் போர்நிறுத்தம் ஏற்படும் வரை ஹிஸ்புல்லா தனது தாக்குதல்களை நிறுத்தாது என்றும் அவர் கூறினார்.

சமீபத்திய வாரங்களில் லெபனானில் பதற்றங்கள் அதிகரித்த நிலையில், ஹிஸ்புல்லாவை எல்லையில் இருந்து பின்னுக்குத் தள்ளும் நோக்கில் மோதலில் ஒரு புதிய கட்டத்தை இஸ்ரேல் ஆரம்பித்தது. வடக்கு இஸ்ரேலில் இருந்து ஆயிரக் கணக்கானோர் இடம் பெயர்ந்தனர்.

தற்போது இஸ்ரேல் தாக்குதலில் உயர்மட்ட ஹிஸ்புல்லா இராணுவத் தளபதிகளின் மரணத்துக்கு வழி வகுத்தது என்றும், இக்குழுவால் பயன்படுத்தப்பட்ட பேஜர்கள் உட்பட பல தகவல் தொடர்பு சாதனங்கள் அழிக்கப்பட்டன. இதன் போது 37 இறப்புகள் மற்றும் ஆயிரக் கணக்கானோரின் காயங்களுக்கும் வழி வகுத்தது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கிய பிறகு, ஹிஸ்புல்லா, அதன் எல்லையில் உள்ள இஸ்ரேலிய ராணுவ நிலைகளைத் தாக்கத் தொடங்கியது. காசாவுக்கு ஆதரவாகவே தாக்குதலை செய்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

**ஹிஸ்புல்லா தலைவர் பலி**

இஸ்ரேலிய தாக்குதலில் குறிவைக்கப்பட்ட ஹிஸ்புல்லா தலைவரின் தலைவிதி இதுவரை தெரியவில்லை. ஆயினும் இரு முக்கிய ஹிஸ்புல்லா தலைவர்கள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லாவின் மத்திய தலைமையகத்துக்கு எதிராக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் நடத்திய "இலக்கு தாக்குதலை" தொடர்ந்து ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லாவின் கதி என்னவென்று இதுவரை தெரியவில்லை.

தாக்குதலின் இலக்கு நஸ்ரல்லா என்று இஸ்ரேல் கூறியது. ஆனால் தாக்குதலைத் தொடர்ந்து அவர் "நன்றாக இருக்கிறார்" என்று ஹிஸ்புல்லா கூறியுள்ளது. அதேவேளை தமது மாண்புமிகு செயலாளர் நாயகம் நலமாக உள்ளார். அவர் இலக்கு வைக்கப்பட்ட இடத்தில் இல்லை, என்று ஹிஸ்புல்லாஹ் ஊடக தொடர்பு அதிகாரி ஹஜ் முஹம்மத் அஃபிஃப் தெரிவித்தார்.

அத்துடன் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் நஸ்ரல்லாவின் தற்போதய நிலை குறித்த அதிகார பூர்வ நிலைப்பாட்டை இன்னமும் வழங்கவில்லை.

தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் ஏவுகணைப் பிரிவின் தளபதி முஹம்மது அலி இஸ்மாயில் மற்றும் அவரது துணைத் தலைவர் ஹுசைன் அஹ்மத் இஸ்மாயில் ஆகியோர் துல்லியமான தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெரிவித்தன.

அலி இஸ்மாயில் பல பயங்கரவாத தாக்குதல்களை இயக்கியதற்கும், இஸ்ரேலிய எல்லையை நோக்கி ராக்கெட்டுகளை வீசியதற்கும், மத்திய இஸ்ரேலை நோக்கி தரையிலிருந்து மேற்பரப்புக்கு ஏவுகணையை செலுத்துவதற்கும் பொறுப்பானவர் என்று இஸ்ரேல் கூறியது.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணைகள் மற்றும் ராக்கெட் படையின் தலைவரான இப்ராஹிம் முஹம்மது கபிசி மற்றும் இந்தப் பிரிவின் மற்ற மூத்த தளபதிகள் முன்பு கொல்லப்பட்டதை அடுத்து, தற்போது முக்கிய இரண்டு தலைவர்களை ஒழித்ததாக ஐ.டி.எவ் இன் அறிவிப்பு வந்துள்ளது.



# மீண்டும் பள்ளிக்குச் செல்வோம் என்னும் நிகழ்வு நுவரெலியாவில்

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா நாகசேணை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட கற்றோர் பேரவையின் ஏற்பாட்டில் “மீண்டும் பள்ளிக்கு செல்வோம்”என்ற தொனிப்பொருளில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கற்றோர் பேரவையின் தலைவர் பி.தியாகராஜா தலைமையில் வித்தியாலய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு நேற்று (29) வித்தியாலய அதிபர் என்.சிவலிங்கம் வழிகாட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பழைய மாணவர்கள் சிறுவயதில் எவ்வாறு இந்த வித்தியாலயத்துக்குச் சமூகமளித்திருந்தது போன்று இந்த நிகழ்வில் புத்தகப்பையுடன் வருகை தந்திருந்தனர்.

இவ்வாறு வருகை தந்த பழைய மாணவர்கள் வகுப்பறையில் அமர்ந்து கல்வி கற்றனர். இவர்களுக்கு ஆரம்பத்தில் கற்பித்த ஆசிரியர்களும் பாடசாலைக்கு சமூகம் தந்து வகுப்பறையில் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது பழைய மாணவர்கள் அவர்களுடைய கற்றல் காலத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்களோ அதேபோன்று இந்த நிகழ்வில் மாணவர்கள் போல் தங்களுடைய செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

அத்துடன் கற்றல் பேரவையின் நிதியின் ஊடாக அமைக்கப்பட்டிருந்த “ஸ்மார்ட்” வகுப்பறையும் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டது. பழைய மாணவர்களின் விளையாட்டு நிகழ்ச்சிகளும் இந்த நிகழ்வை அலங்கரித்தன.

அத்தோடு கற்றுத்தந்த ஆசிரியர்கள் இன்று பாடசாலைக்கு வரும் பொழுது பழைய மாணவர்களைக் கட்டித் தழுவி முத்தமிட்டு தங்களுடைய சந்தோசத்தை பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் என். சிவலிங்கம் மற்றும் கல்வி அதிகாரிகள் கற்றல் பேரவையின் செயலாளர் எஸ். கௌசல்யா, பொருளாளர் எஸ். எலெக்சாண்டர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.









# கௌரவம்!

## பொலிவூட் நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு 'தாதா சாகேப் பால்கே' விருது அறிவிப்பு

பிரபல பொலிவூட் நடிகர் மிதுன் சக்கரவர்த்திக்கு (வயது-74) இந்திய சினிமாவின் உயரிய விருதான 'தாதா சாகேப் பால்கே" விருது அறிவிக்கப்பட்டுள்ளது.


மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர் மிதுன் சக்கரவர்த்தி. 'மிரகயா' என்ற படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். முதல் படத்திற்கே சிறந்த நடிகருக்கான தேசிய விருதை வென்றார். தொடர்ந்து பொலிவூட்டில் பல வெற்றிப் படங்களில் நடித்தார். குறிப்பாக இவரின் 'டிஸ்கோ டான்ஸர்' படம் ஹிந்தி சினிமாவை யும் தாண்டி இந்தியாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் பிரபலமானது. குறிப்பாக அந்தப் படத்தில் வரும் 'ஐ ஏம் ஏ டிஸ்கோ டான்ஸர்' பாடல் இந்திய அளவில் பிரபலமானது.

தி நக்சலைட்டிஸ், கவாப், கஸ்தூரி, சித்தாரா, ஹிம்மத்வாலா, அக்னிபாத் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். சில படங்களைத் தயாரித்துள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் நடுவராகப் பங்கேற்று வருகிறார். பெங்காலி மொழிப் படங்களிலும் நடித்துள்ளார். 1989ஆம் ஆண்டில் 19 படங்களில் நடித்தமைக்காக லிம்கா சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளார்.

மூன்று தடவைகள் தேசிய விருது, பிலிம் பேர் விருது உள்ளிட்ட விருதுகளை வென்றுள்ளார். இந்தாண்டு பத்ம பூஷண் விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. சினிமாவைத் தாண்டி அரசியலிலும் உள்ள இவர், தற்போது பா.ஜ.கவில் உள்ளார். ராஜ்யசபா எம்.பி.யாகவும் இருந்துள்ளார்.

சினிமாவில் இவரது கலைச் சேவையைப் பாராட்டி மத்திய அரசு இந்திய சினிமாவின் உயர்ந்த விருதான 'தாதா சாகேப் பால்கே' விருதை அறிவித்துள்ளது.

தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டுள்ள மிதுன் சக்கரவர்த்திக்கு பொலிவூட் திரைப்பிரபலங்கள் பலர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.



# கள்ளநோட்டு

## சினிமாப் பாணியில் மோசடிக்கு தயாரானவர்கள் பிடிபட்டனர்




குஜராத்தில் பொலிவூட் நடிகர் அனுபம் கேர் புகைப்படத்துடன் அச்சிடப்பட்ட கோடிக்கணக்கில் மதிப்புடைய கள்ளநோட்டுகள் சிக்கியுள்ளன.

சாகித் கபூர், விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான ஃபார்சி [Farzi] வெப் சீரிஸைப் பார்த்து, அதில் வருவது போல் ஏமாற்றி பணம் சம்பாதிக்க நினைத்த கும்பல் ஒன்று மகாத்மா காந்திக்குப் பதிலாக பொலிவூட் நடிகர் அனுபம் கேரின் படத்தைக் கொண்ட ரூ.1.30 கோடி மதிப்பிலான 500 ரூபா கள்ள நோட்டுகளை அச்சடித்துப் பதுக்கி வைத்துள்ளது.

இந்த நோட்டுகளில் 'ரிசர்வ் பாங் ஒவ் இந்தியா' என்பதற்குப் பதிலாக 'ரிசோல் பாங் ஒவ் இந்தியா' என்றும் 'ஸ்டேட் பாங் ஒவ் இந்தியா' என்றும் அச்சிடப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த கள்ள நோட்டுகளை பொலிஸார் தற்போது பறிமுதல் செய்துள்ளனர்.

அதேவேளை, சூரத் நகரில் பதுங்கி இருந்த நால்வரை குஜராத் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். பொலிவூட் திரையுலகின் மூத்த நடிகர்களுள் ஒருவரான அனுபம் கேர் நடிப்பில் எமர்ஜென்சி படம் விரைவில் வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பைத்தியம்!

## "கமலா ஹாரிஸ் மனநலம் பாதிக்கப்பட்டவர்" என விமர்சித்த டிரம்ப்

"கமலா ஹாரிஸ் மனநலம் பாதிக்கப்பட்டவர்" என டொனால்ட் டிரம்ப் கடும் விமர்சனம் செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆளுங்கட்சியான ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் ஆகியோருக்கிடையே நேரடிப் போட்டி நிலவுகிறது.

இந்நிலையில், பென்சில்வேனியாவில் நேற்று பிரசாரம் செய்த டிரம்ப்,

"அமெரிக்காவில் குற்றங்கள் பெருகி வருகின்றன எனவும், பொலிஸார் கடுமையான அடக்குமுறையைக் கையில் எடுத்து குற்றச்செயல்களை ஒடுக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

"புலம்பெயர்ந்தோரின் வன்முறை மற்றும் பிற குற்றவாளிகளின் படையெடுப்பால் அமெரிக்கா சிதைந்து வருகிறது.

பல்வேறு விஷயங்களில் ஜோ பைடன் அரசு தோல்வியடைந்துவிட்டது. எல்லை வழியாக சட்டவிரோதமாக குடியேறியவர்களால் நாட்டிற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க கமலா ஹாரிஸால் எதையும் செய்ய முடியாது.

பல்வேறு இடங்களில் உள்ள கடைகளில்திருடர்கள்பட்டப்பகலில்கொள்ளையடிக்கும் சம்பவங்கள் நடக்கின்றன, இந்த விடயத்தில் பொலிஸார் முரட்டுத்தனமாகச் செயல்படவேண்டும். குற்றவாளிகளுக்குப் பாடம் புகட்டவேண்டும். ஆனால், அவர்கள் தங்கள் பணியைச் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஏனென்றால், தாராளவாதிகள் அவர்களை அனுமதிக்க மாட்டார்கள்.

ஜோ பைடனைப் போன்று கமலா ஹாரிஸூம் மனநலம் பாதிக்கப்பட்டவர்" என்றார்.

இதற்கிடையே லொஸ் வேகாஸில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய கமலா ஹாரிஸ்,

எல்லைப் பாதுகாப்பில் உள்ள கடுமையான பிரச்சினைகள் குறித்து குறிப்பிட்டார். மேலும், நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் குடியேற்ற சீர்திருத்தத்தின் அவசியம் என தனது வழக்கமான பாணியில் உரையாற்றினார்.

மேலும், டொனால்ட் டிரம்ப் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாட்டார் என்பது நமக்குத் தெரியும். அவர் அதிபராக இருந்தபோது, நமது குடியேற்ற அமைப்பை சரிசெய்ய எதுவும் செய்யவில்லை" என்றும் கமலா ஹாரிஸ் பதிலடி கொடுத்தார்.



# தெ.ஆபிரிக்காவில் அருகருகே இரு வீடுகளில் துப்பாக்கிச்சூடு!

## 12 பெண்கள் உட்பட 17 பேர் பலி

தெனனாபிரிக்காவில் நடந்த துப்பாக்கி சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் கிழக்கு கேப் மாகாணம் லுசிகி நகரில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இந்நிலையில், அந்நகரில் அருகருகே உள்ள 2 வீடுகளில் நேற்று அடுத்தடுத்து துப்பாக்கிச்சூடு சம்பவம் நடைபெற்றது. இதில், 12 பெண்கள் உள்பட 17 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பியோடிய நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். குடும்ப நிகழ்ச்சியின்போது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது என முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

பக்கங்கள் 04

# கனடா முரசு

திங்கட்கிழமை 30/09/2024

## ஓநாய்த் தாக்குதலில் கல்கரி சிறுமி காயம்!

கனடாவின் கல்கரிப் பகுதியில் கடந்த் சனிகிழமை காலை ஓநாய் தாக்கி சிறுமியொருவர் காயமடைந்துள்ளார்.

இவ்வாறு காயமடைந்த சிறுமி அல்பேர்ட்டா வைத்திய 02



# லெபனானில் இருந்து கனடியர்களை வெளியேற்றும் நடவடிக்கை மும்முரம்

**லெபனானின் தலைநகரமான பெய்ரூட்டில் இஸ்ரேல் குண்டுவீசக்கூடும் என்கிற ஏற்பட்ட அச்சத்தில் அங்கு இருந்து கனடா அதன் குடிமக்களை பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.**

**கனடாவின் வெளிநாட்டு விவகார அமைச்சர் மெலனி ஜோலி, கடந்த வெள்ளிக்கிழமை இதுகுறித்து அறிவிப்பு வெளி யிட்டார்.**

**“கனடா, தற்காலிகமாக கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வணிக விமானங்களில் அதன் குடிமக்களுக்கு இருக்கைகள் ஒதுக்கியுள்ளது” என்று ஜோலி தனது சமூக ஊடகப் பக்கத்தில் தெரிவித்தார்.**

“ஓர் இருக்கை கிடைத்தால், தயவு செய்து அதை பயன்படுத்திக்கொள்ளுங்கள்” என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த வாரம், இஸ்ரேல் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் லெபனானில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இது லெபனானில் மேலும் பாரிய அளவிலான அழிவுகளை உருவாக்கக்கூடிய யுத்தத்தை ஏற்படுத்தும் என அச்சம் அதிகரித்துள்ளது.

ஜோலி, லெபனானில் உள்ள கனேடிய குடிமக்களை, அவர்கள் உதவிக்காக பெய்ரூட்டில் உள்ள கனடா தூதரகத்தில் தங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அதே நேரத்தில், மீட்பு நடவடிக்கைகளுக்காக நிதியுதவிக்கு தேவைப்படும் குடிமக்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.






# சக மாணவி மீது தீவைத்த 14 வயது சிறுமிக்கு தண்டனை விதிக்க அரசுத் தரப்புக் கோரிக்கை

கனடாவிலுள்ள பள்ளி ஒன்றில் பயிலும் 14 வயது சிறுமி ஒருத்தி, தன் னுடன் பயிலும் சக மாணவி மீது தீவைத்த விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய செய்தி நினைவிருக்கலாம்.

இம்மாதம், அதாவது, செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி, கனடாவின் Saskatoon மாகாணத்தில் அமைந்துள்ள Evan Hardy Collegiateஇல் படிக்கும் 14 வயது சிறுமி, தன் சக மாணவியான 15 வயது சிறுமி மீது தீவைத்தாள்.

உடனடியாக ஆசிரியைகள் தீயை அணைக்க முயன்றாலும் அந்த மாணவி படுகாயமடைந்தாள்.

அவள் மீது தீவைத்த 14 வயது சிறுமி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவள் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவளை வயது வந்த நபராக கருதி, அவளுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும் என அரசு தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இன்னொரு பக்கமோ, அந்த சிறுமிக்கு மன நல பாதிப்பு உள்ளதாகவும், அவள் மன நல பாதிப்புக்காக சிகிச்சை பெற்று வந்ததாள் எனவும், அவளுக்கு ஆட்டிசக் குறைபாடு உள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தீவைக்கப்பட்டதால் படுகாயமடைந்த அந்த 15 வயது மாணவி இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.




## ஓநாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் மேற்கொண்ட ஓநாய் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓநாய் தாக்க முயற்சிக்கும் போது சத்தமாக குரல் எழுப்ப வேண்டுமெனவும், ஏதேனும் பொருள்களை ஓநாய் மீது வீசி எறிய வேண்டுமெனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஓநாயைக் கண்டதும் பயந்து ஓடினால் அது வேகமாக துரத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# 115,000 டொலர்கள் வருட வருமானம் குடும்ப வாழ்வுக்குப் போதுமானதல்ல!

## இந்திய வம்சாவளி தொழில்நுட்ப வல்லுநரின் கருத்து

கனடாவில் வாழும் இந்திய வம்சாவளி தொழில்நுட்ப வல்லுநரின் உண்மையான கருத்துகள் சமூக வலைதளங்களில் பரவலாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அவர் தனது 115,000 டொலர் (அதாவது இந்தியப் பணத்தில் சுமார் ரூ. 70 லட்சம்) சம்பளம் போதுமானதாக இல்லை என்று கூறுகிறார்.

இது ரொறன்ரோவில் வாழும் மக்களின் உயர்ந்த வாழ்க்கைச் செலவுகள் குறித்து விவாதங்கள் கிளம்பியுள்ளன.

இந்தக் கருத்து, பியுஷ் மோங்கா பகிர்ந்த வீடியோவில் வெளியாகி உள்ளது.

அந்த வீடியோவில், மனைவி குழந்தை இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர் தனது வாழ்க்கைச் செலவுகளைப் பற்றி ஆதங்கமாகப் பேசுகிறார்.

"ஆண்டுக்கு 100,000 டொலர் என்பது போதவில்லை" எனக் கூறிய அவர், தனது வீட்டு வாடகைக்கு மட்டுமே மாதம் 3,000 டொலர் (சுமார் ரூ. 2,51,130) செலவாகிறது என்றும் தெரிவித்தார்.

மோங்கா, "நீங்கள் எவ்வளவு சம்பளம் பெறுகிறீர்கள்?" என கேட்டபோது, அந்த நபர் "நான் 100,000 டொலருக்கு மேல் சம்பளம் பெறுகிறேன், ஆனால் இப்போது அது போதாது, குறிப்பாக ரொறன்ரோவின் மத்திய பகுதியில் வாழும்போது போதாது" என பதிலளித்தார்.

இந்த வீடியோவுக்குப் பின்னர், பல சமூக வலைதள பயனர்கள் தங்களின் கருத்துகளைப் பதிவு செய்தனர். சிலர் அவரது நிலையைப் புரிந்து கொண்டனர். சிலர் அதனை விமர்சித்துள்ளனர்.

# சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முயற்சித்த இருவர் கைது



கனடாவிலிருந்து, சட்டவிரோதமான அடிப்படையில் அமெரிக்காவிற்கு பிரவேசிக்க முயற்சித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் இத்தாலிய பிரஜைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரயில் பாதை பாலத்திற்கு அருகாமையில் காணப்படும் கடவையில் வைத்து இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு அதிகாரிகளும் அமெரிக்க எல்லை பாதுகாப்பு முகவர் நிறுவன அதிகாரிகளும் கூட்டாக இணைந்து இந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஒன்றாரியோவில் இருந்து நியூயோர்க் செல்வதற்கு இந்த நபர்கள் முயற்சித்துள்ளனர்.

37 வயதான ராபெல் காம்பினோ மற்றும் 60 வயதான களாக்ரோ அனாசெச்சி ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பதின்ம வயதுடைய தன் மாணவி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த ஆசிரியர்!




கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் ஆசிரியர் ஒருவர் தகாத செயலில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

22 ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியராக கடமை யாற்றி வரும் 47 வயதான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு குற்றம் சுமத் தப்பட்டுள்ளார்.

பதின்ம வயதுடைய மாணவி ஒரு வரைப் பாலியல் ரீதியாக துஷ் பிரயோகம் செய்தார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 5 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.

எந்தப் பாடசாலையில் இந்த சம்ப வம் இடம்பெற்றது என்பது குறித்து தகவல்கள் வெளியிடப்படவில்லை.

எவ்வாறு எனினும் ரொறன்ரோ வைச் சேர்ந்த டோனி பனிக்கியா என்ற 47 வயது ஆசிரியர் மீதே இந்தக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியருக்கு எதிராக சுமார் 6 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆசிரியர் வேறு மாணவர்க ளையும் தகாத செயற்பாடுகளுக்கு உட்படுத்தி இருப்பார் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரி விக்கப்படுகிறது.




# உணவு வகைகளின் விலை லாப்ராடோரில் அதிகரிப்பு

## மக்கள் பெரும் விசனத்தில்

கனடாவில் உணவு விலை அதிகரிப்பு குறித்து மக்கள் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

லாப்ராடோர் பகுதியைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

உணவு அடிப்படை தேவைகளில் ஒன்று எனவும் கூடுதல் விலைக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்வது பொருத்தமற்ற செயல் எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அடிப்படை உணவுப் பொருடள்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது நியாயமற்ற செயல் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு குடும்பத்திற்கு தேவையான உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

பல குடும்பங்கள் உணவுப் பொருள்களுக்குச் செலவிடு வதில் சவால்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளன்ச் என சுட்டிக்காட்டியுள்ளனர்.